2013 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டம் பகுதியிலே புதியதாக துணை மின் நிலையம் அமைக்கவேண்டிய அவசியம் இருக்கிறதா என்பது குறித்து உரிய ஆய்வுகளை தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கொள்ளும். அந்த ஆய்வுகளின் அடிப்படையில், அந்தப் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் தேவையென்று சொன்னால், எம்மாதிரியான துணை மின் நிலையம் அங்கு தேவை என்பதைக் கண்டறிந்து, 110/11 கே.வி. வேண்டுமா அல்லது 33/11 கே.வி. வேண்டுமா என்பதை ஆய்வு செய்து, தேவையின் அடிப்படையில், மின் பளுவின் தேவையை அறிந்து, அதன் அடிப்படையிலே, அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய அவசியம் பற்றி அரசு பரிசீலிக்கும்.

அதேநேரத்தில், இந்தத் துணை மின் நிலையம் அமைக்க சற்று காலதாமதம் ஆனாலுங்கூட, எந்தத் துணை மின் நிலையத்திலிருந்து இப்போது மின்சாரம் வழங்கப்படுகிறதோ, அந்தத் துணை மின் நிலையத்தின் தரத்தை உயர்த்தி, சீரான மின்சாரம் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 352, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

352—

தொழிற்பேட்டை

***20083—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலுங்கூட அரசுப் புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், சிட்கோ மூலமாக செஞ்சி தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. விழுப்புரம் மாவட்டத்தில், உளுந்தூர்பேட்டை வட்டம், ஆசனூர் கிராமத்தில் தொழிற்பேட்டை இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று, திண்டிவனம் வட்டத்திலே, வெண்மணி ஆத்தூர் கிராமத்தில் தொழிற்பேட்டை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது செஞ்சிக்கும், வெண்மணிக்கும் 22 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் அந்தப் பகுதியில் இருக்கும் தொழில் முனைவோர்கள் யாராவது தொழிற்பேட்டை அமைக்கக் கேட்டால், அந்த வெண்மணி கிராமத்தைக்கூட அவர் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக இருக்கும்.

மேலும், விழுப்புரம் மாவட்டத்தில், உளுந்தூர்பேட்டை வட்டத்தில், ஏ. சாத்தனூர் என்ற இடத்தில் 219 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டு, தொழிற்பேட்டை அமைக்கும் பணிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று ஆசனூர்-2 என்ற திட்டமும் ஏற்படுத்தப்பட்டு, அங்கே தரிசு நிலம் கண்டறியப்பட்டு, நிலமாற்றப் பிரேரணை நில நிர்வாக ஆணையர்மூலம் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் ஒன்றியம், தம்மநாயக்கன்பட்டி ஊராட்சி, எத்திலப்பம்பட்டி கிராமத்தில் 250 குடும்பங்களுக்கு மேல் கருகுமணி மாலை, பாசிமணி மாலை போன்றவற்றைச் செய்து,*

2013 ஏப்ரல் 30]

இந்தியா முழுவதும் இன்றைக்குச் சப்ளை செய்யும் நிலைமையில் இருக்கிறார்கள். இந்தக் கிராமத்தில் இருக்கின்ற அந்தத் தொழில் முனைவோர்களை ஒருங்கிணைத்து, தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா அல்லது K.V.I.B. மூலமாக அவர்களுக்கு Market linkage உருவாக்கித் தரப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து ஏற்றுக்கொள்ளப்படும் என்றாலுங்கூட, அந்தத் தொழில் செய்பவர்களெல்லாம் ஒட்டுமொத்தமாக ஒருங்கிணைந்து, அந்த மாவட்டத்தில் இருக்கிற எங்கள் துறையின் இயக்குநர்களை அணுகினால், அவர்களுக்கு நிச்சயம் அந்தப் பணி செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 353, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

353—

அங்கன்வாடி மையம்

***19930—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, செண்பகத்தோப்பு ஆட்டுப் பண்ணையில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, செண்பகத்தோப்பு ஆட்டுப் பண்ணையில் புதிய